OPEN ACCESS

Manuscript ID:
TAM-11022026-11414

Volume: 11

Issue: 2

Month: October

Year: 2026

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 17.07.2026

Accepted: 20.08.2026

Published: 01.10.2026

Citation:
Mathesh, K., and P. Senthilkumar. "The Cultural Evolution and Decline of Water Buffaloes in the Works of Kovai Sadasivam." *Shanlax International Journal of Tamil Research*, vol. 11, no. 2, 2026, pp. 57–67.

DOI:
https://doi.org/10.34293/tamil.v11i2.11414

*Corresponding Author:
matheshktamilphd8599@gamil.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

The Cultural Evolution and Decline of Water Buffaloes in the Works of Kovai Sadasivam

K. Mathesh
Full-Time Ph.D. Research Scholar, Department of Tamil Research
Government Arts and Science College, Periyar University
Papireddipatti, Dharmapuri

P. Senthilkumar
Assistant Professor, Department of Tamil Research
Government Arts and Science College, Periyar University
Papireddipatti, Dharmapuri

Abstract

From the earliest period of human civilization, the domestication of animals and their transformation into livestock have played a major role in the economic and cultural development of human societies. In this context, this study offers a detailed historical and anthropological analysis of the geographical distribution of water buffaloes, their treatment in the grammatical and literary traditions of the ancient Tamils, their cultural bonds with tribal communities across the world, and the effects of the commercialization of buffaloes in recent history. For this study, the descriptive methodology was applied to the primary data: the Tholkappiyam's Marabiyal (the chapter on traditional usage) principles and the Sangam literary concordances Natrinai, Akananuru, and the "Erumaipathu" (the "Ten Verses on the Buffalo") of Ainkurunuru. Analytical and comparative methodologies were applied to Indus Valley seals, the ways of life of the Toda, Gond, and North American Plains tribes, and statistics from India's animal husbandry department. The study finds that in the life of the ancient Tamils, the buffalo was not merely a domestic animal. It was a symbol of wealth and was given as a wedding gift. Because of its majestic gait, it was also honored with the epithet "Annal" (noble one), which marks it as an exalted emblem of tradition. Further, in the Indus Valley worship tradition, the buffalo-horned "Pasupati" figure has a historical heritage of being worshipped either as the principal deity or as a shaman (saamiyaadi) who led religious rituals. Yet the study also reveals a historical contradiction: in later Aryan Puranic texts such as the Devi Mahatmyam, and in religious rituals, the buffalo was deliberately belittled and neglected. From an anthropological perspective, the study shows that the destruction of buffaloes, which serve as the totem and object of worship of the Toda tribe, is not merely a loss of biodiversity but becomes a disintegration of the cultural identity of an ancient human community. It also shows that the deliberate mass slaughter of buffalo (bison) in North American history was a political strategy used by the American government to destroy the economy of the Plains tribes and cripple them. According to the economic analysis, buffalo milk production contributes about 43% of India's total dairy economy at the national level, making it a very important component. In contrast to this national trend, however, Tamil Nadu's dairy sector has a markedly different structure. Dominated by cows, buffalo milk production there is recorded at a

very low 2.4%. The study points out that this sharp decline in production is linked to socio-environmental factors such as the proliferation of crossbred cows, shortage of grazing land, and fodder scarcity in dry seasons. It also identifies, as indirect psychological factors, excessive spiritual and social constructs that exalt the cow, along with traditional devotional attitudes.

Keywords: *Annal, Domesticated Animals, Water Buffaloes, Uzhakkal (Wallowing), Indigenous Peoples, Disruption of Livelihoods, Geographical Distribution, Marshlands, Inanimate-Gender Classification (Ahrinai), Totem, Loss of Biodiversity, Environmental Transgression, Archaeological Evidence, Excavation, Seal, Morphological Features, Anatomical Characteristics.*

References

1. Balakrishnan, R. (2021). Anineadai Erumai (The Buffalo with the Majestic Gait). p. 60. Bharathi Puthakalayam, Chennai - 600 018.
2. Logeswaran, M. (April 2024). Sanga Ilakkiya Urai Verupaattu Kalanjiyam: Ainkurunuru (Encyclopedia of Variant Commentaries on Sangam Literature: Ainkurunuru). p. 140. New Century Book House, Chennai - 600 050.
3. Jeyapal, R. Akananuru. pp. 446-447. New Century Book House, Chennai - 600 050.
4. Balakrishnan, R. (2021). Anineadai Erumai. p. 66. Bharathi Puthakalayam, Chennai - 600 018.
5. Ibid., p. 66.
6. Kovai Sadasivam. (2021). Naattu Vilangugal (Native Animals). p. 71. Kurinji Pathippagam, Tiruppur - 641 605.
7. Ibid., p. 64.
8. Ibid., p. 64.
9. Nakkeeran. (2021). Soozhalum Saathiyamum (Ecology and Caste). pp. 64-65. Kaadodi Pathippagam, Tiruvarur - 610 105.

கோவை சதாசிவம் படைப்புகளில் நீர் எருமைகளின் பண்பாட்டு பரிணாமும் வீழ்ச்சியும்

கா. மாதேஸ்
முழு நேர முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழாய்வுத்துறை
அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி
பெரியார் பல்கலைக்கழகம், பாப்பிரெட்டிப்பட்டி, தருமபுரி

பொ. செந்தில்குமார்
உதவிப் பேராசிரியர், தமிழாய்வுத்துறை
அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி
பெரியார் பல்கலைக்கழகம், பாப்பிரெட்டிப்பட்டி, தருமபுரி

ஆய்வுச்சுருக்கம்

மனித நாகரிக வரலாற்றின் தொடக்க காலம் முதலே விலங்குகளைப் பழக்குதலும் அவற்றை வளர்ப்பு உயிரிகளாக மாற்றுதலும் மனிதச் சமூகத்தின் பொருளாதார மற்றும் பண்பாட்டு வளர்ச்சியில் பெரும் பங்கு வகித்துள்ளன. இவ்வகையில் நீர் எருமைகளின் புவியியல் பரவல் பழந்தமிழர் இலக்கண, இலக்கியப் பார்வைகள், உலகளாவிய பழங்குடிச் சமூகங்களின் பண்பாட்டுப் பிணைப்பு மற்றும் தற்கால வரலாற்றில் எருமைகளின் வணிகமயமாக்கல் விளைவுகளை வரலாற்று ரீதியாகவும் மானிடவியல் நோக்கிலும் விரிவாகப் பகுப்பாய்வு செய்ய வேண்டியுள்ளது. இவ்ஆய்வின் வழி, பழந்தமிழர் வாழ்வியலில் எருமை என்பது வெறும் கால்நடையாக மட்டுமன்றி, செல்வத்தின் அடையாளமாகவும், திருமணப் பரிசாகவும் கொடுக்கப்பட்டது. அதன் வலிமைமிக்க நடையழகின் காரணமாக 'அண்ணல்' என்ற அடைமொழியுடனும்போற்றப்பட்டஉயரியமரபுஅடையாளமாகத்திகழ்ந்திருப்பதுகண்டறியப்பட்டுள்ளது. சிந்துவெளி வழிபாட்டு மரபில் எருமைக்கொம்பு சூடிய 'பசுபதி' வடிவம் முதன்மைத் தெய்வமாகவோ அல்லது சமயச் சடங்குகளை முன்னெடுக்கும் சாமியாடியாகவோ வழிபடப்பட்ட வரலாற்றுத் தொன்மத்தைக் கொண்டிருந்தாலும், பிற்கால ஆரியப் புராணங்களான "தேவி மகாத்மியம்" போன்ற நூல்களிலும் சமயச் சடங்குகளிலும் எருமை திட்டமிட்டுச் சிறுமைப்படுத்தப்பட்டுப் புறக்கணிக்கப்பட்ட வரலாற்று முரண்பாடும் இங்கு வெளிப்படுத்தப்பட்டுள்ளது. மானிடவியல் நோக்கில், தோடர் பழங்குடிகளின் குலக்குறியாகவும் (Totem) வழிபாட்டுப் பொருளாகவும் விளங்கும் எருமைகளின் அழிவு, ஒரு பல்லுயிர் இழப்பு மட்டுமல்லாமல் தொன்மையான மனிதக் கூட்டத்தின் பண்பாட்டு அடையாளச் சிதைவாக மாறுகிறது என்பதும், வட அமெரிக்க வரலாற்றில் நிகழ்ந்த திட்டமிட்ட எருமைப் பேரழிப்பு என்பது அங்கிருந்த சமவெளிப் பழங்குடிகளின் பொருளாதாரத்தைச் சிதைத்து அவர்களை முடக்குவதற்காக அமெரிக்க அரசால் பயன்படுத்தப்பட்ட அரசியல் உத்தி என்பதும் நிரூபிக்கப்பட்டுள்ளது. பொருளாதாரப் பகுப்பாய்வின்படி, இந்தியாவின் ஒட்டுமொத்த பால் பொருளாதாரத்தில் எருமைப்பால் உற்பத்தி தேசிய அளவில் சுமார் 43% பங்களிப்பை வழங்கி மிக முக்கிய அங்கமாகத் திகழ்கிறது. இருப்பினும், தேசிய அளவிலான இந்த வளர்ச்சிப் போக்குடன் ஒப்பிடுகையில், தமிழ்நாட்டின் பால் உற்பத்தித் தளம் முற்றிலும் மாறுபட்ட கட்டமைப்பைக் கொண்டு, பசுக்களின் ஆதிக்கத்தால் எருமைப்பால் உற்பத்தி வெறும் 2.4% என்ற மிகக் குறைந்த அளவிலேயே பதிவாகியுள்ளது. இந்தத் தீவிர உற்பத்தி வீழ்ச்சிக்குக் கலப்பினப் பசுக்களின் பெருக்கம், மேய்ச்சல் நிலக் குறைபாடு மற்றும் வறட்சிக் காலத் தீவனத் தட்டுப்பாடு போன்ற சமூக-

சுற்றுச்சூழல் காரணிகளோடு, பசுவை உயர்வு நவிற்சியாகப் பார்க்கும் மனிதர்களின் அதீத ஆன்மீக-சமூகக் கட்டமைப்புகளும், மரபார்ந்த வழிபாட்டு மனநிலைகளுமே மறைமுக உளவியல் காரணிகளாக அமைந்துள்ளன என இவ்ஆய்வு சுட்டிக்காட்டுகிறது.

கலைச் சொற்கள்: *அண்ணல், வளர்ப்பு உயிரினங்கள், நீர் எருமைகள், உழக்கல், பூர்வகுடிகள், வாழ்வாதாரச் சிதைவு, புவியியல் பரவல், சதுப்பு நிலங்கள், அஃறிணைப் பால் பகுப்பு, குலக்குறி, பல்லுயிர் பெருக்க இழப்பு, சுற்றுச்சூழல் அத்துமீறல், தொல்லியல் சான்றுகள், அகழ்வாராய்ச்சி, முத்திரை, உடலமைப்பியல் கூறுகள், உடற்கூறியல் தன்மைகள், பொருளாதாரச் சக்தி, கலப்பினப் பசுக்கள், இனப்பெருக்க மேலாண்மை, உயர் கொள்முதல் விலை, சுற்றுச்சூழல் காரணிகள்.*

முன்னுரை

மனித நாகரிக வரலாற்றின் தொடக்கத்தில் விலங்கினங்களைப் பழக்குதல், அவற்றைத் தங்களின் வாழ்வாதரத்தோடு இணைத்துக் கொள்ளுதல் பூர்வகுடிச் சமூகங்களின் வழக்கமாகும். அவற்றுள் “நீர் எருமைகள்” (Water Buffaloes) முதன்மை காரணியாக விளங்கி வருகின்றன. பழந்தமிழர் இலக்கிய மரபிலும் உலகளாவிய பழங்குடிகளின் பண்பாட்டுத் தளத்திலும் “நீர் எருமைகள்” தனித்துவமான இடத்தைப் பெற்றுள்ளன. நீர் எருமைகள் தற்காலப் பல்லுயிர்ச் சூழலில் அவை எதிர்கொள்ளும் வணிகமயமாக்கல் சார்ந்த நெருக்கடிகளை எதிர்கொள்கின்றன. அவற்றுள் சூழலியல் ஆய்வாளர் கோவை சதாசிவம் அவர்களின் படைப்புகளை முதன்மை ஆதாரமாகக் கொண்டு இக்கட்டுரை விரிவாக ஆராயப்படுகிறது.

தொல்காப்பிய மரபியல் காட்டும் நுட்பமான அஃறிணைப் பால் பகுப்புப் பெயர்களான சொல்வளச் செறிவோடும், சங்க இலக்கிய மருதத்திணைப் பாடல்கள் சித்தரிக்கும் பதிவுகள், சிந்துவெளி நாகரிகத் தொல்லியல் சான்றுகளுடனும், தோடர்-கோண்டு போன்ற மூத்த பழங்குடியினரின் ஆன்மீகக் குலக்குறி (Totem) வழிபாட்டு முறைகளுடனும் ஒப்பிட்டு நோக்கி, அவற்றின் வரலாற்றுத் தொடர்ச்சியை மானிடவியல் நோக்கில் பகுப்பாய்வு செய்வது இவ்ஆய்வின் முதன்மை நோக்கமாகும்.

மேலும், அமெரிக்கச் சமவெளிப் பழங் குடிகளின் வீழ்ச்சிக்குக் காரணமான எருமைகளின் திட்டமிட்ட பேரழிவையும், இந்தியச் சூழலில் பசுவைச் சுற்றிப் பிற்காலத்தில் கட்டமைக்கப்பட்ட சமூக - ஆன்மீக உருவாக்கத்தால், எருமைகள் சந்தித்து வரும் சமயம், சடங்கு மற்றும் பொருளாதாரப் புறக்கணிப்புகளையும், சூழலும் சாதியும் சார்ந்த உளவியல் காரணிகளோடு வெளிப்படுத்தும் கோவை சதாசிவம் அவர்களின் கூர்மையான சூழலியல் கோட்பாடுகளை மையமிட்டு, தற்காலத் தமிழ்நாட்டின் பால் பொருளாதார வீழ்ச்சியையும் மேய்ச்சல் நில ஆக்கிரமிப்புகளையும் தடுத்து நிறுத்த வேண்டியதன் அவசியத்தை உணர்த்தும் ஒரு முறையான ஆய்வு நெறியியல் (Research Methodoldgy) அணுகுமுறையாக இக்கட்டுரை வடிவமைக்கப்பட்டுள்ளது

அறிமுகமும் புவியல் பரவலும்

மனித வரலாறு தொடங்குவதற்கு முன்பே, மனிதன் தன் தேவைகளுக்காகப் பெரும்பாலான விலங்குகளை வளர்ப்பு உயிரினங்களாக மாற்றியுள்ளான். அவற்றுள் நீர் எருமைகள் முதன்மையானவை. இவ்வுயிரினங்கள் இந்திய துணைக்கண்டத்தில் அதிகளவில் காணப்படுகிறன.

உலகில் 207 மில்லியன் எருமைகள் உள்ளன. குறிப்பாக தெற்காசியாவில் உள்ளது.[1] பல தென்கிழக்கு ஆசிய நாடுகளில் இவற்றை பால் உற்பத்திக்காகவும் இழுவை மற்றும் விவசாயத்தில் உழக்கவும் பயன் படுத்துக்கின்றன. நீர் நிறைந்த சதுப்பு நிலங்களில் எருமைகளை கொண்டுதான் உழக்க முடியும் என்கிறார் சதாசிவம் அவர்கள்.

பழந்தமிழ் இலக்கணத்தில் எருமை (தொல்காப்பிய மரபு)

பழந்தமிழரின் வாழ்வியலையும் மொழியையும் நெறிப்படுத்திய தொல்காப்பியம், எருமையின் இளமைப் பெயரை "கன்று" என்று அழைப்பதை மரபியல் நூற்பாவழி அறிய முடிகிறது.

யானையும் குதிரையும் கழுதையும் கடமையும்
மானொரு ஐந்தும் கன்று எனற்கு உரிய
- (தொல் பொருள் - 563)

மேலும், மனித குழந்தையை குறிக்கும் "குழவி" என்ற சொல்லை, எருமையின் இளமைப் பருவத்தைக் குறிக்கவும் தொல்காப்பியம் பயன்படுத்துகிறது.

குஞ்சரம் பெறுமே குழவிப் பெயர் கொடை
- (தொல் பொருள் 567),
ஆவும் எருமையும் அது சொலப்படுமே
- (தொல் பொருள் 568).

இவற்றுடன், பெண் எருமையை "நாகு" என்றும், ஆண் எருமைகளை "ஏறு", "போத்து" என்றும் அஃறிணைப் பால் பகுப்பு அடிப்படையில் தொல்காப்பிய மரபியல் பெயரிட்டு அழைக்கிறது. இவ்வாறு ஒவ்வொரு உயிரினத்திற்கும் நுட்பமாகப் பால் வகுத்து பெயரிடும் சொல்வளமும் இலக்கணச் செறிவும் தமிழரின் தனித்துவமான மரபு அடையாளங்களாகும்.

சங்க இலக்கியங்களில் எருமை குறியீடுகள்

தொல்காப்பிய இலக்கண மரபையொத்து சங்க இலக்கிய தொடரடைவும் அமைந்துள்ளன. எருமைகளின் தோற்றம், இயல்பு மற்றும் மக்களின் வாழ்வியலோடு அவை கொண்டிருந்த பிணைப்பினைச் சங்க பாடல்களில் விரிவாகக் காணமுடிகிறது. "தட மருப்பு எருமை மட நடைக் குழவி" - நற்றிணை 120, "தட மருப்பு எருமை பிணர்ச் சுவல் இரும் போத்து" - நற்றிணை 271, "மடக்கண் எருமை பாண்நாகு தழீ" - அகநானூறு 146, "எருமை நல் ஆண் கருநாகு பெறூஉம்" - பெரும்பாணாற்றுப்படை 165.

வாழ்வியல் பதிவுகள்

சங்க காலத்தில் எருமைகள் செல்வத்தின் அடையாளமாகவும், திருமணப் பரிசாகவும் விளங்கின என்பதை அகநானூற்றுப் பாடல் உணர்த்துகிறது.

தருமணல் தாழப்பெய்து இல்பூவல் ஊட்டி
எருமை பெடையோடு எமர் ஈங்கு அயரும்

பெண்களுக்குத் திருமணம் அமையும் பொருட்டு, பெற்றோர் மண மகளுக்குக் கறவை எருமைகளைப் பரிசாக வழங்க வீட்டு முற்றத்தில் கட்டியள்ளனர். தனக்கு திருமண ஏற்பாடுகள் நடப்பதை அறிந்த தலைவி, தன் தோழியிடம் கூறி தலைவனை விரைந்து வந்து மணம் (வரைவு கடாதல்) செய்துகொள்ளுமாறு தூது விடுக்கும் சூழலை இப்பாடல் விளக்குகிறது. மேலும், ஐங்குறுநூறு, மருதத்திணையில் ஓரம்போகியார் "எருமைப்பத்து" என்ற தலைப்பில் பத்து பாடல்களைப் பாடியுள்ளார்.

நெறிமருப்பு எருமை நீலைரும் போத்து
வெறிமலர் பொய்கை ஆம்பல் மயக்கும்
(ஔவை சு.துரைசாமிப்பிள்ளை,
பாடல் -91)

முறுக்கிய கொம்புகளையுடைய கருநிற ஆண் எருமை "போத்து", பொய்கையில் பூத்திருக்கும். ஆம்பல் கொடி மயங்கும்படி அழிக்கும். இப்படிப்பட்ட கழனி ஊரானின் மகளிவள்.

எருமைநல் ஏற்றினம் மேயல் அருந்தென்ப்
பசுமோ ரோடமோடு ஆம்பல் ஒல்லா
(ஔவை சு.துரைசாமிப்பிள்ளை,
பாடல் -93)

ஆண் எருமைகள் மரோடம் மற்றும் ஆம்பல் மலர்களை மேய்ந்து அழித்து விட்டதால், வண்டுகள் தேனுண்ண இடமின்றி தலைவியின் கூந்தலில் சூடியுள்ள மலர்களை நோக்கி மொய்க்கின்றன. மேலும் அணிநடை எருமை யாடிய அள்ளல்[2] என எருமையின் நடையை சிறப்பித்து கூறுகின்றனர். வலிமிகு முன்பின் அண்ணல் ஏஎறு[3] என அண்ணல்

என்ற அடைமொழியைத் தருகின்றனர். தமிழ் மொழி இந்நாட்டின் ஆகச் சிறந்த தலைவர்களுக்கும் அண்ணல் என்ற சொல்லை பயன்படுத்துகின்றனர்[4]

தமிழ் இலக்கியத்தில் ஓர் உயிரினத்தை வலிமை மிகுந்த அண்ணல் என்று கூறிப்பிடும் பொழுது அந்த சமூகத்தில் அந்த உயிரினம் எவ்வளவு வலிமை பெற்று சிறப்புற்றிருக்கும் என்பதை அறிய முடிகிறது.

தொல்லியல் சான்றுகள்

வரலாற்றாசிரியர்களின் கூற்றுப்படி, விலங்கினங்களை மனிதப் பயன்பாட்டிற்குப் பழக்கப்படுத்தும் வரலாற்றுச் செயல்பாடானது (Domestication Process) பொது ஆண்டிற்கு முன் (பொ.ஆ.மு) 2500-ஆம் ஆண்டுக்களுக்கு முன்பே தொடங்கியுள்ளதாக நம்பப்படுகிறது. குறிப்பாக, மெசபோடாமியா மற்றும் இந்தியத் துணைக்கண்டத்தில் ஹரப்பா, மொகஞ்சதாரோ, குஜராத், ஹரியானா உள்ளிட்ட பகுதிகள் வரை எருமைகள் பரவியிருந்தன. சிந்துசமவெளி நாகரிகத் தளங்களிலும் எருமைகள் பழக்கப்படுத்தப்பட்டுப் பல்வேறு வாழ்வியல் மற்றும் வேளாண் பணிகளில் ஈடுபடுத்தப் பட்டதற்கான சான்றுகள் கிடைக்கின்றன.

சிந்துவெளி அகழ்வாராய்ச்சி முத்திரை யொன்றில், தீவனத் தொட்டியின் அருகில் எருமை ஒன்று அமர்ந்திருக்கும் துல்லியமான சித்தரிப்பு காணப்படுகிறது. இவற்றோடு, தைமதாபாத் போன்ற தொல்பழங்காலப் பகுதிகளிலிருந்து வடக்கு நோக்கி நகரும் போது, சிந்துவெளி மண்பாண்டங்களில் எருமையின் கொம்புகள் பதிக்கப்பட்ட வடிவங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளதை அறியமுடிகிறது. இத்தகைய விலங்கு வளர்ப்பு முறையானது பிற்காலத்தில் வழிபாட்டு மரபோடும் பிணைக்கப் பட்டுள்ளதை விளக்கும் வரலாற்று ஆய்வாளர் ஆர்.பாலகிருஷ்ணன் அவர்கள், தனது நூலில்,

> **தைமதாபாத் என்ற பகுதியிலிருந்து மேலே சென்றால் சிந்துவெளிப் பானைகளில் எருமையின் கொம்பு பதிக்கப்பட்டவை கிடைக்கின்றன. அதற்கு பின்னால் போனால் பசுபதி என்று சொல்லும் ஒரு எருமையின் கொம்பினை தலையில் சூடிய வழிபாட்டு மரபுகளுடன் கூடிய சாமியாடி அல்லது அவரே சாமியாக இருக்கும் நிலையினைக் காணலாம்[5]**

எனக் குறிப்பிடுகிறார். இதன் மூலம் எருமையின் கொம்புகளைத் தலையில் சூடிய நிலையிலுள்ள வழிபாட்டு மரபுகள் நிலவியதும், அது சமயச் சடங்குகளை முன்னெடுக்கும் சாமியாடி அல்லது முதன்மைக் கடவுளாகக் கருதப்பட்ட “பசுபதி” வழிபாட்டு வடிவத்துடன் தொடர்புடையதாக இருந்ததும் புலனாகிறது.

மேலும், இந்த வரலாற்று முத்திரைகள் மற்றும் சிற்பங்களில் செதுக்கப்பட்டுள்ள எருமைகளின் உடலமைப்பியல் கூறுகளைத் (Anatomical features) தற்கால இந்தியக் காடுகள் மற்றும் சதுப்பு நிலங்களில் வாழும் பிரம்மாண்டமான ஆண் எருமைகளின் (Wild Water Buffaloes) தோற்றத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கும் போது, அவை மிகத் துல்லியமாக ஒத்திருப்பதை அறிய முடிகிறது. இது அக்கால மக்கள் இவ்விலங்கினத்தின் உடற்கூறியல் தன்மைகளை உற்றுநோக்கித் தங்களின் கலை மற்றும் சமயக் குறியீடுகளில் மிக ஆழமாகப் பதிவு செய்துள்ளனர் என்பதை அறியமுடிகிறது.

பழங்குடியினப் பண்பாட்டில் எருமை (மானிடவியல் பார்வை)

இயற்கையோடு இயைந்த வாழ்வியல் நெறியிலிருந்து மாறாமல், முன்னோர்களின் மரபைப் பின்பற்றி வாழும் சமூகம் பழங்குடிச் சமூகமாகும். காட்டின் விலங்குகளையும் பறவைகளையும் வெறும் உயிரினங்களாக கருதாமல், இயற்கையின் பேராற்றல் (கடவுள்) என நம்பினர். தங்கள் குல அடையாளமாக ஏதேனும் ஒரு குறிப்பிட்ட விலங்கையோ பறவையோ “குலக்குறியாகக்” (Totem) கொண்டு, அதைத்

தங்களின் மூதாதையராகக் கருதி வழிபட்டனர். தோடர் பழங்குடிகள் தாங்கள் அனைவரும் எருமையின் வழியில் உதித்தவர்கள் என்று நம்பும் இவர்கள், எருமையை தெய்வமாக வழிபடுகின்றனர். இவர்களின் வழிபாட்டு தலமான தொழுவத்தில் எருமைப் பாலை வைத்தே சடங்குகள் நடத்தப்படுகின்றன. மேலும் கொடுக்கல், வாங்கல், அன்பளிப்பு மற்றும் திருமணம் போன்ற சடங்குகளில் எருமையை சீர்வரிசையாக வழங்குகின்றனர்.

தோடர்கள் வளர்க்கும் எருமையினம் முற்றிலும் தனித்துவமானது. கடல் மட்டத்தில் இருந்து சுமார் 7000 அடிகள் உயரத்தில் மட்டுமே இந்த இனம் காணப்படுகிறது. நூறு ஆண்டுகளுக்கு முன்பு பல்லாயிரகணக்கில் இருந்த இந்த வகை எருமைகள் இப்போது 1500 க்கும் குறைவாகவேயுள்ளன. வனத்தில் சீகை, கற்பூரம், தேயிலை, பைன் மரங்கள் புல்வெளிக்காடுகளை அடியோடு ஆக்கிரமிப்பதால் மேய்ச்சல் நிலங்கள் இல்லாமல் பசுந்தீவனம் கிடைக்காமல் இந்த இன எருமைகள் அழிவை சந்திக்கின்றன.[6]

ஒரு தனித்துவமான விலங்கினம் அழிவதென்பது வெறும் பல்லுயிர் பெருக்க இழப்பு மட்டுமல்ல, ஒரு தொன்மையான மனித கூட்டத்தின் பண்பாட்டு அடையாளமே சிதைந்து போவதாகும். சத்திஸ்கர் பகுதியில் கோண்டு இன பழங்குடி மக்கள் தனது பாரம்பரிய நடனத்தின் போது தலையில் எருமை கொம்பினை வைத்துக் கொண்டு ஆடுவர்.

சிவகங்கை மாவட்டத்தில் வாழும் நரிக்குறவர் சமூக மக்கள் "பத்ரகாளி" தெய்வத்திற்கு எருமையை பலியிட்டு வழிபடுவதை கோ.லோகநாதன் "தென்னிந்தியாவும் சிந்துவெளி எருமை குறியீடும்" என்ற தனது ஆய்வுக் கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.

உலக வரலாற்றில் எருமைகளின் அழிவும் பூர்வகுடிகளின் வீழ்ச்சியும்

கடந்த ஆயிரத்து ஐநூறு ஆண்டுகளுக்குள் தான் எருமைகள் சிறுமைப்படுத்தப்பட்டுள்ளன என்கிறார் சூழலியல் எழுத்தாளர் கோவை சதாசிவம். குறிப்பாக வட அமெரிக்கா வரலாற்றில் நிகழ்ந்த எருமைகளின் (Bisons/ Buffaloes) பேரழிப்பு சுற்றுச்சூழல் மற்றும் அரசியல் அத்துமீறலின் உச்சமாகும்.

1871-ஆம் ஆண்டில் எருமைத் தோலைத் தொழிற்பாட்டு இயந்திரங்களுக்கு உகந்த உயர்தரத் தோலாக மாற்றியமைக்கும் தொழில்நுட்பத்தை அமெரிக்கா கண்டறிந்தது. இத்தொழில்நுட்பப் புரட்சியின் விளைவாக, எருமைத் தோல்களுக்கான வர்த்தக மதிப்பு பன்மடங்கு உயர்ந்ததால், வணிக ரீதியிலான எருமை வேட்டை தீவிரமடைந்து அவற்றின் ஒட்டுமொத்தப் பெருக்கம் முடக்கப்பட்டது. ஐரோப்பிய-அமெரிக்க பழங்குடியின வேட்டைக்காரர்கள் எருமைகளின் தோல்களை மட்டும் சேகரித்துக் கொண்டு, அவற்றின் எஞ்சிய உடல் பாகங்களை நிலப் பரப்பிலேயே அழுகிப் போகும்படி கை விட்டுச் சென்றனர்.

இப்பண்பாடற்ற வணிகச் செயல்பாடு, அங்கிருந்த சமவெளிப் பழங்குடியினரிடையே (Plain Tribes) கடுமையான மனவேதனையை ஏற்படுத்தியது. ஏனெனில், பழங்குடிகள் எருமைகளைத் தங்களின் வாழ்வாதாரமாக மட்டுமன்றி, ஆன்மீகப் பெருமதிப்புமிக்க உயிரியாகவும் கருதியதால், மேட்டுக் குடியினரின் இச்செயலை இயற்கைக்கு இழைக்கப்பட்ட பெரும் அவமதிப்பாகவும் சுற்றுச்சூழலின் சிக்கலாகவும் கருதினர்.

எருமைகளின் இந்த முறையற்ற அழிப்பு, அமெரிக்க அரசிற்குத் தன் அரசியல் நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்ளும் ஒரு சாதகமான உத்தியாக அமைந்தது. சமவெளிப் பழங்குடிகளைத் தங்களின் பூர்விக வாழ்வியலிலிருந்து விடுவித்து, நவீனக் குடியேறிகளின் வாழ்க்கை முறைக்கு மாற்றுவதை அரசு இலக்காகக் கொண்டிருந்தது. எருமைகளின் முழுமையான அழிவு பழங்குடிகளின் பொருளாதாரத்தை முற்றிலுமாகச் சிதைத்தது. இதன் விளைவாகத் தற்சார்பு இழந்த

பழங்குடியின மக்களைக் குறிப்பிட்ட எல்லைக்குட்பட்டும் நாடோடியாகவும், மாற்று நிலப்பகுதிகளில் (Reservations) முடக்கி வைப்பது அமெரிக்க அரசிற்கு மிக எளிதாயிற்று.

சமவெளிப் பழங்குடிகளின் முதன்மையான உணவு ஆதாரமாகவும் விளங்கிய எருமைகள் முழுமையாகக் முடக்கப்பட்ட சூழலில், அவர்கள் தங்களின் உயிர்வாழ்விற்காகப் பாரம்பரியத் தொழில் முறைகளைக் கைவிட்டு, நவீன விவசாய உத்திகளைக் கற்றுக்கொள்ள வேண்டிய கட்டாயத்திற்கு ஆளாக்கப்பட்டனர். இறுதிப் பகுப்பாய்வாக, எருமை இனத்தின் திட்டமிட்ட அழிப்பானது, ஐரோப்பியக் குடியேறிகள் தங்களின் விவசாயப் பரப்பை விரிவுபடுத்துவதற்கும், அப்பகுதிகளில் தங்களின் நில ஆதிக்கத்தை நிலைநாட்டுவதற்கும் ஏதுவான பரந்த நிலப்பரப்பை உருவாக்கிக் கொடுத்தது.

புராணங்களில் எருமை

சங்க இலக்கிய அகநானூற்றில் "நாரரி எருமையூரன், நேராவன்றோன் வடுகர் பெருமகன் பேரிசை எருமை நன்னாடு" என்ற குறிப்பும் அவை பக்தி இலக்கியத்தில் எருமை நன்னாடுவை "மகிஷீ" என்று குறிக்கிறது என்பதை கோவை சதாசிவம் சுட்டிக்காட்டியுள்ளார்.

புலிப்பாலுக்காக அத்துமீறி காட்டுக்குள் நுழையும் அரச தத்துபுத்திரன் ஐயப்பனை இடைமறித்தவள் "மகஷீ." பெண்ணின் உடலோடும் எருமைத்தலையோடும் உள்ள மகஷீயை அரச வம்ச புத்திரன் ஐயப்பன் வதம் செய்த இடத்திற்கு பெயர் "எருமை கொல்லி" இன்று எருமேலி என ஆகிவிட்டது.[7]

வனங்களில் யாகங்களை வளர்க்க தடையாக உள்ள மகிஷாசூரனை வதம் செய்ய தேவர்கள் அனைவரும் ஒரு சக்தியை உருவாக்குகிறார்கள். இவன் அனைத்து ஆண்களையும் எதிர்த்து சண்டையிட்டு வெற்றி பெற்றான். காரணம் ஒரு பெண்ணால் மட்டுமே தனக்கு இறப்பு நிகழ வேண்டுமென வரம் பெற்றான். அதனால் தேவர்கள் அனைவரும் காளிதேவியை வணங்கி எருமை தலையுடன் இருக்கும் அசுரனை கொன்று வெற்றிப் பெறுகிறார்கள். காளி தேவிக்கு "மகிஷாசூரவர்த்தினி" (எருமை தலை அரக்கனை கொன்றவள்) என பெயர் சூட்டப்படுகிறது என்பதை "தேவி மகாத்மியம்" என்ற நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வேள்வித்தீயில் பலியிட எருமைகளை வேட்டையாடிய ஆரிய தேவர்களை எதிர்த்து களமாடிய மகிடாசூரனை துர்க்கை வதம் செய்வதாக புராணம் பேசுகிறது.[8]

மேலும்

> **மஹிஷாம் சாவிகாம் சாஜம் அயஜ்ஞியம் உதாஹருதம்**
> **மஹிஷம் வர்ஜேயன் மஹாயாம் சூரம்ததி கதஷ்யதி**
>
> **(ஹரி பக்தி விலாசா : ப-155)**

யாகத்தில் எருமை நெய் அல்லது ஆட்டு நெய் இவற்றைப் பயன்படுத்தக் கூடாது. எருமையிடம் இருந்து வந்த பால், தயிர், நெய் ஆகியவற்றை பயன்படுத்த கூடாதென "ஹரி பக்தி விலாசா" என்ற இந்து புராண நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தமிழர் பண்பாடான பொங்கல் விழாவில் மாட்டுப் பொங்கலன்று எருமைகளை முன்னிருத்திக் கொண்டாடுவதில்லை. புராண கதைகள், சடங்குகள், சம்பிரதாயம் போன்றவற்றில் எருமைமாடு புறக்கணிக்கப் படுகிறது. வரலாற்றுப் பூர்வமான பொருளியல் சான்றுகள் எருமையின் ஆதிக்கத்தை உணர்த்தும் போது, பண்பாட்டுத் தளத்தில் அது திட்டமிட்டுப் புறக்கணிக்கப் பட்டதன் பின்னணியில் உள்ள அரசியல் என்ன? பழந்தமிழர் திருமணப் பரிசாகவும் செல்வத்தின் குறியீடாகவும் கருதிய ஓர் உயிரினத்தைப் பொங்கல் போன்ற அறுவடைத் திருநாட்களில் முன்னிறுத்தாமல் தவிர்ப்பது முறையானதா? இக்கேள்விகள், இழந்த நமது சமத்துவப் பண்பாட்டு வரலாற்றை மீட்டெடுக்கவும், கால்நடை வளர்ப்பில்

நிலவும் சாதிய-சமயப் பார்வைகளை நிராகரிக்கவும் நம்மைத் தூண்டுகின்றன.

கால்நடைப் பொருளாதரத்தில் எருமையின் பங்களிப்பு

இந்தியாவின் ஒட்டுமொத்த பால் பொருளாதாரத்தில் எருமைப்பால் உற்பத்தி மிக முக்கிய அங்கமாகும். உலகளாவிய எருமைப்பால் உற்பத்தியில் சுமார் 70 சதவித பங்களிப்பை வழங்கி இந்தியா உலக அளவில் முதலிடத்தில் உள்ள நிலையில், தேசிய அளவில் இதன் பங்களிப்பு சுமார் 43.15% முதல் 43.62% வரை நிலையாக நீடிக்கிறது.

இந்திய அரசின் அடிப்படை கால்நடை பராமரிப்பு புள்ளிவிவரங்களின்படி (Basic Animal) நாட்டின் மொத்த பால் உற்பத்தி 2021-2022 நிதியாண்டில் 221.1 மில்லியன் மெட்ரிக் டன்களிலிருந்து (MMT) படிப்படியாக உயர்ந்து, 2025-2026 நிதியாண்டில் தோராயமாக 252 MMT ஆகவும் மதிப்பிடப்பட்டுள்ளது. இதில் எருமைப்பால் உற்பத்தியானது 96.4 MMT இலிருந்து உயர்ந்து தற்போது 104 முதல் 109 MMT என்ற அளவில் வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளது. இனம் சார்ந்த தரவுகளின் அடிப்படையில், முர்ரா (Murrah) போன்ற அதிக பால் தரும் நாட்டுப்புற எருமை இனங்கள் (Indigenous Buffalo) 31.18% பங்களிப்பையும், வகைப்படுத்தப்படாத உள்ளூர் இனங்கள் (Non&Descript) 11.97% பங்களிப்பையும் வழங்குகின்றன. மாநில வாரியாக உத்தரப் பிரதேசம், ராஜஸ்தான், மத்தியப் பிரதேசம் மற்றும் குஜராத் ஆகிய மாநிலங்கள் எருமைப்பால் உற்பத்தியில் தேசிய அளவில் 54 விழுக்காட்டிற்கும் மேல் வழங்கி முன்னிலையில் உள்ளன.

தேசிய அளவிலான போக்குகளுடன் ஒப்பிடுகையில், தமிழ்நாடு முற்றிலும் மாறுபட்ட ஒரு கட்டமைப்பைக் கொண்டுள்ளது. மாநிலத்தின் ஒட்டுமொத்த வருடாந்திர பால் உற்பத்தில் பசு மாடுகளின் பங்களிப்பு 97.6% (10,426.18 ஆயிரம் டன்கள்) ஆக மிக உயர்ந்த ஆதிக்கத்தைச் செலுத்துகிறது. மாறாக, தமிழ்நாட்டின் எருமைப்பால் உற்பத்தி வெறும் 2.4% (சராசரியாக 250.66 ஆயிரம் டன்கள்) என்ற மிகக் குறைந்த அளவிலேயே பதிவாகியுள்ளது.

புவியியல் ரீதியாக, தமிழ்நாட்டின் வட மற்றும் மத்திய மாவட்டங்களான சேலம், தருமபுரி, கிருஷ்ணகிரி, வேலூர் மற்றும் திருச்சி ஆகிய பகுதிகளில் மட்டுமே எருமை வளர்ப்பு ஓரளவிற்குத் தடையின்றித் தொடர்கிறது. எருமைப்பாலில் உள்ள அதிகப்படியான கொழுப்புச் சத்து (Fat 6%-8%) மற்றும் திடப்பொருள் (SNF) காரணமாக, ஆவின் நிறுவனம் விவசாயிகளுக்கு லிட்டருக்கு ₹44 முதல் ₹48 வரை உயர் கொள்முதல் விலையை வழங்குகிறது. மேலும் வணிகச் சந்தையில் இதன் சில்லறை விற்பனை விலை லிட்டருக்கு ₹70 வரை எட்டுகிறது.

தமிழ்நாட்டில் ஏற்ப்பட்டுள்ள தீவிர உற்பத்தி வீழ்ச்சிக்கு ஜெர்சி மற்றும் ஹெச்.எஃப் (Holstein Friesian) போன்ற அதிக பால் தரும் கலப்பினப் பசுக்களின் பெருக்கம், உள்ளூர் எருமை இனங்களின் பற்றாக்குறை மற்றும் வறட்சி காலங்களில் எருமைகளுக்குத் தேவையான அதிகப்படியான நீர்நிலை மற்றும் பசுந்தீவனத் தட்டுப்பாடு ஆகிய சமூக-சுற்றுச்சூழல் காரணிகள் முதன்மையாகக் கண்டறியப்பட்டுள்ளன. அதோடு மனிதர்களின் அதீத மூடநம்பிக்கைகளும், மாடுகள் குறித்த மரபார்ந்த வழிபாட்டு மனநிலைகளும் இம்மாற்றங்களுக்கு முக்கியக் காரணமாக விளங்குகின்றன.

பசு என்பது பணிவான தாய்மைக்குக் குறியீடு நல்ல பெண்மணிக்கும் அடையாள சின்னம். பசுவுக்கும் பெண்ணுக்கும் ஒரே பெயரை வைக்கலாம். பணிவை மீறினால் அவளை "எருமை" என திட்டலாம். ஆனால் பாருங்கள் திராவிட நாகரிகமான

சிந்துவெளி நாகரிக சின்னங்களில் பசுக் களின் உருவம் தென்படவே இல்லை. பசுக்கள் இருந்ததற்கான பொருளியல் சான்றுகள் உள்ளன. ஆனால் அவை பண்பாட்டு அடையாளங்களாக இல்லை.[9] இதன் மூலம், பசுவைச் சுற்றியுள்ள தற்போதைய சமூக-ஆன்மீகக் கட்டமைப்பானது பிற்காலத்தில் உருவான ஒரு குறிப்பிட்ட பண்பாட்டு நகர்வே அன்றி, அது இந்தியாவின் அனைத்துத் தொல் நாகரிகங்களுக்கும் பொதுவானதல்ல என்பதும், இத்தகைய வழிபாட்டு மனநிலைகளே தற்போதைய கால்நடைப் பராமரிப்பு மற்றும் பால் உற்பத்தி வீழ்ச்சி போன்ற பொருளாதாரச் சிக்கல்களுக்கு மறைமுக மற்றும் உளவியல் காரணியாக அமைந்துள்ளன என்பதும் தெளிவாகிறது.

முடிவுரை

நீர் எருமைகள் என்பவை வெறும் வேளாண் மற்றும் பால் உற்பத்தி சார்ந்த கால்நடைகள் மட்டுமல்ல, அவை பழந்தமிழர் திணைசார் வாழ்வியலோடும், சிந்துவெளி போன்ற தொல் நாகரிகங்களின் வழிபாட்டு மரபுகளோடும் பிணைக்கப்பட்ட ஆழமான பண்பாட்டுக் குறியீடுகள் என்பது நிறுவப்பட்டுள்ளது.

பிற்காலப் புராணப் புனைவுகளாலும், தற்காலத் தீவிர வணிகமயமாக்கலாலும் இவ்விலங்கினம் திட்டமிட்டுப் புறக்கணிக்கப் பட்டு, விளிம்பு நிலைக்குத் தள்ளப் பட்டுள்ளது. இச்சூழலில், ஒரு தொன்மையான உயிரினத்தின் வீழ்ச்சி என்பது வெறும் பல்லுயிர் இழப்பு மட்டுமல்ல, அது ஒரு சமூகத்தின் வரலாற்றுத் தொடர்ச்சியின் சிதைவு. எருமைகள் குறித்த தற்போதைய எதிர்மறைப் பொதுப்புத்தியை மாற்றி, அவற்றின் வரலாற்று மற்றும் சூழலியல் பங்களிப்பைத் பாடத்திட்டங்களின் வழியே அடுத்த தலைமுறைக்குக் கொண்டு சேர்ப்பதே இதற்கான முதன்மைத் தீர்வாகும்.

மேய்ச்சல் நில ஆக்கிரமிப்பும், அந்நியத் தாவரங்களின்பெருக்கமும்தோடர்போன்ற மூத்த பழங்குடிகளின் வாழ்வாதாரத்தையும், அவர்களின் குலக்குறியான தனித்துவமிக்க எருமையினங்களையும் அழிவின் விளிம்பிற்குத் தள்ளியுள்ளதை இவ்ஆய்வு மிகத் தீர்க்கமாகப் பகுப்பாய்வு செய்துள்ளது.

இயற்கையோடு இயைந்த ஒரு தொல்குடியின் பண்பாட்டுச் சிதைவைத் தடுக்க வேண்டுமாயின், அரசு வனப்பாது காப்பு என்ற ஒற்றை இலக்கைத் தாண்டி, பழங்குடியினரின் பாரம்பரியக் கால்நடை வளர்ப்பையும் உள்ளடக்கிய "ஒருங்கிணைந்த சூழலியல் மேலாண்மைத் திட்டத்தை" உடனே நடைமுறைப்படுத்த வேண்டும்.

சிந்துவெளி முத்திரைகள் மற்றும் தைமதாபாத் தொல்பொருட்களில் காணப்படும் எருமை மற்றும் "பசுபதி" வழிபாட்டு வடிவங்கள், திராவிட நாகரிகத்தின் தொடக்கக் காலப் பண்பாட்டு அடையாளமாக எருமைகளே திகழ்ந்தன என்ற வரலாற்று உண்மையைச் சான்றுகளுடன் உறுதி செய்கின்றன. ஆனால், பிற்காலத்தில் கட்டமைக்கப்பட்ட ஆதிக்கக் கருத்தியல்களும், வேத காலத்திற்குப் பிந்தைய சமய மாற்றங்களும் எவ்வாறு பசுவை உயர்வு நவிற்சியாகவும், எருமையைத் தீமையின் குறியீடாகவும் (மகிஷாசூரன் வதம் வழியே) சித்தரித்தன என்பதை இவ்ஆய்வின் மூலம் அறியமுடிகிறது.

இந்தியத் தேசிய அளவில் எருமைப்பால் உற்பத்தி ஒரு பிரம்மாண்ட பொருளாதாரச் சக்தியாகத் திகழும் வேளையில், தமிழ்நாட்டில் அதன் உற்பத்தி வெறும் 2.4% ஆக வீழ்ச்சியடைந்திருப்பதன் பின்னணியில் உள்ள சமூக-சுற்றுச்சூழல் மற்றும் உளவியல் காரணிகளை அறிய முடிகிறது.

துணைநூற் பட்டியல்

1. பாலகிருஷ்ணன் ஆர்., அணிநடை எருமை., 2021., ப-60., பாரதி புத்தகாலயம், சென்னை - 600 018.
2. லோகேஸ்வரன் ம,ஏப்ரல் 2024, சங்க இலக்கிய உரை வேறுபாட்டு

களஞ்சியம் ஐங்குறுநூறு, ப.140, நியுசெஞ்சுரி புக்ஹவுஸ், சென்னை - 600 050.
3. செயபால் இரா., அகநானூறு., பக். 446-447., நியுசெஞ்சுரி புக்ஹவுஸ், சென்னை - 600 050.
4. பாலகிருஷ்ணன் ஆர்., அணிநடை எருமை., 2021., ப.66., பாரதி புத்தகாலயம்., சென்னை - 600 018.
5. மேலது.இ ப.66.
6. கோவை சதாசிவம்., நாட்டு விலங்குகள், 2021., ப-71., குறிஞ்சி பதிப்பகம்., திருப்பூர் - 641 605.
7. மேலது., ப.64.
8. மேலது., ப.64.
9. நக்கீரன்., சூழலும் சாதியமும்., 2021. பக்-64, 65., காடோடி பதிப்பகம், திருவாரூர் - 610 105.